014594

<u>சுருக்கம்</u>

பள்ளிக் கல்வி – 2017–18 ஆம் கல்வியாண்டு முதல் அனைத்து வகை அரசு / அரசு உதவி பெறும் தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள், மாநகராட்சி, மெட்ரிக், ஆங்கிலோ–இந்தியன் பள்ளிகளில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து தாய் மொழி உணர்வையும் நாட்டுப்பற்றையும் வளர்க்கும் வண்ணம் மொழி வாழ்த்து, நாட்டுப்பண் இசைத்தல் மற்றும் மாணவர் திறனை ஊக்குவித்தல் ஆகியவற்றின் அடிப்படையில் காலை வணக்கக் கூட்ட நிகழ்ச்சியை அனைத்துப் பள்ளி வேலை நாட்களிலும் நடத்துதல் – புதிய வழிகாட்டுதல்கள் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>பள்ளிக் கல்வி[பக5(1)]துறை</u>

அரசாணை (1டி) எண்.335 நாள் : 02.06.2017

(திருவள்ளுவராண்டு 2048, வைகாசி 19)

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (1டி) எண்.264, பள்ளிக்கல்வி(இ1)த்துறை, நாள்: 06.07.2012.
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.33679/எம்/இ1/ 2017, நாள்: 31.05.2017.

******

<u>ஆணை :–</u>

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், அனைத்து பள்ளிகளிலும் ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமையன்று பொது காலை வணக்கக் கூட்டமும் மற்ற நாட்களில் அது வகுப்பறை நிகழ்வாகவும் அனைத்து மாணவர்களும் சுழற்சி முறையிலும் அமைக்குமாறும், சான்றாகப் பட்டியலில் உள்ள நிர்வாக தமிழ்த்தாய் வாழ்த்தை ஒவ்வொரு மாணவனும் தன்முறை வரும்போது பாடப்படவும், உரிய செயல்பாடுகள் பின்பற்றுதல் குறித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், 03.05.2017 அன்று மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்கள் தலைமையில் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர் சங்கங்களுடன் நடைபெற்ற கருத்துக்கேட்பு நிகழ்வில் காலை வணக்கக் கூட்டம் தினமும் நடைபெற வேண்டுமென ஆசிரியர் சங்கங்களின் சார்பில் வேண்டுகோள் வைக்கப்பட்டது எனவும், ஆசிரியர் சங்கங்களின் இக்கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு உரிய ஆணை வழங்கப்படுமென மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது எனவும், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து தாய் மொழி உணர்வையும் நாட்டுப்பற்றையும் வளர்க்கும் வண்ணம் மொழி வாழ்த்து, நாட்டுப்பண் இசைத்தல் மற்றும் மாணவர் திறனை ஊக்குவித்தல் ஆகியவற்றின் அடிப்படையில் காலை வணக்கக் கூட்ட நிகழ்ச்சியை அனைத்துப் பள்ளி வேலை நாட்களிலும் நடத்திடலாம் எனவும் தெரிவித்து, இதற்கான கீழ்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி பள்ளிக் கல்வித் துறைக்கு உட்பட்ட அனைத்துப் பள்ளிகளிலும் காலை வணக்கக் கூட்ட நிகழ்ச்சியை அனைத்து வேலை நாட்களிலும் நடத்திட உரிய ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார் :–

<u>திங்கட்கிழமைக்கான காலை வணக்கக் கூட்ட நிகழ்ச்சி நிரல் :–</u>

1. தமிழ்த் தாய் வாழ்த்து – 1.30 நிமிடங்கள்
2. கொடியேற்றுதல் மற்றும் கொடி வணக்கம் – 2 நிமிடங்கள்

www.Padasalai.Net



| | | | |
|---|---|---|---|
| 3. | கொடிப் பாடல் | - | 2 நிமிடங்கள் |
| 4. | உறுதி மொழி | - | 2 நிமிடங்கள் |
| 5. | திருக்குறள் மற்றும் விளக்கம் (மாணவர்கள் பங்களிப்புக்குரியது. மாணவர்களுக்கு சுழற்சி முறையில் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்) | - | 2 நிமிடங்கள் |
| 6. | செய்தி வாசித்தல் (மாணவர்கள் பங்களிப்புக்குரியது. மாணவர்களுக்கு சுழற்சி முறையில் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்) | - | 2.30 நிமிடங்கள் |
| 7. | பொது அறிவு / பழமொழி மற்றும் அதற்கான விளக்கம் (மாணவர்களுக்கு சுழற்சி முறையில் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்) | - | 2 நிமிடங்கள் |
| 8. | பிறந்த நாள் வாழ்த்து ( பிறந்த நாள் காணும் மாணவர்களை, தலைமையாசிரியர் அல்லது ஆசிரியர்கள் வாழ்த்த வேண்டும்) | - | 1 நிமிடம் |
| 9. | ஆசிரியர் கருத்து | - | 1 நிமிடம் |
| 10. | நாட்டுப்பண் | - | 1 நிமிடம் |
| | **மொத்தம்** | - | **17 நிமிடங்கள்** |

<u>பிற வேலை நாட்களுக்கான காலை வணக்கக் கூட்ட நிகழ்ச்சி நிரல்:-</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | தமிழ்த் தாய் வாழ்த்து | - | 1.30 நிமிடங்கள் |
| 2. | திருக்குறள் மற்றும் விளக்கம் (மாணவர்கள் பங்களிப்புக்குரியது. மாணவர்களுக்கு சுழற்சி முறையில் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்) | - | 2 நிமிடங்கள் |
| 3. | செய்தி வாசித்தல் (மாணவர்கள் பங்களிப்புக்குரியது. மாணவர்களுக்கு சுழற்சி முறையில் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்) | - | 2.30 நிமிடங்கள் |
| 4. | பொது அறிவு / பழமொழி மற்றும் அதற்கான விளக்கம் (மாணவர்களுக்கு சுழற்சி முறையில் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்) | - | 2 நிமிடங்கள் |
| 5. | பிறந்த நாள் வாழ்த்து (பிறந்த நாள் காணும் மாணவர்களை, தலைமை ஆசிரியர் அல்லது ஆசிரியர்கள் வாழ்த்த வேண்டும்) | - | 1 நிமிடம் |
| 6. | நாட்டுப்பண் | - | 1 நிமிடம் |
| | **மொத்தம்** | - | **10 நிமிடங்கள்** |

3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று 2017-18-ஆம் கல்வியாண்டு முதல் பள்ளிக் கல்வித் துறைக்கு உட்பட்ட அனைத்து வகை அரசு / அரசு உதவி பெறும் தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலை பள்ளிகள், மாநகராட்சி, மெட்ரிக், ஆங்கிலோ-இந்தியன்

www.Padasalai.Net



பள்ளிகளில் மேலே பத்தி 2ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு காலை வணக்கக் கூட்ட நிகழ்ச்சியினை அனைத்துப் பள்ளி வேலை நாட்களிலும் நடத்தப்பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென பள்ளிக் கல்வி இயக்குநர் / தொடக்கக் கல்வி இயக்குநர் / மெட்ரிக் பள்ளிகள் இயக்குநர் ஆகியோருக்கு அறிவுறுத்தி அரசு ஆணை வெளியிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.உதயசந்திரன்
அரசு செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இயக்குநர்,சென்னை–6.
அரசு தேர்வுகள் இயக்குநர், சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை –2.
மாநகராட்சி ஆணையர், மதுரை, கோவை.
நகல்
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு (ம) இளைஞர் நலத்துறை
அமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9.
செயலாளர் அவர்களின் முதுநிலை முதன்மைச் தனிச்செயலர்,
பள்ளிக்கல்வித் துறை, சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
2/6/17